திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, பெட்ரோலில் ஓடக்கூடிய ஜீப் ஒன்றை டீசலில் ஓடக்கூடிய ஜீப்பாக மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகிறது? டீசலில் ஓடக்கூடிய எஞ்சின் உள்ள ஜீப்பை விலைக்கு வாங்கினால் எவ்வளவு கூடுதல் தொகை ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குறைந்தபட்சம் 18,000 ரூபாயிலிருந்து 23,000 ரூபாய் வரை ஆகும். அதைவிட எவ்வளவு சிக்கனமான முறையில் செயல்படுத்த முடியும் என்பது பற்றிய ஆய்வு நடந்து வருகிறது.

ஆரணி—பெங்களூர் விரைவுப் பேருந்துப் பணி

*வினா எண் 93—திரு. வீ. அர்ச்சுனன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆரணிக்கும் பெங்களூருக்கும் இடையே விரைவுப் பேருந்துப் பணியினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

கெலமங்கலம், தளி பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டம்

*வினா எண் 94—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், கெலமங்கலம், தளி ஆகிய பகுதியைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்ய மத்திய அரசு ரூபாய் ஒரு கோடித் திட்டம் தீட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) எப்போது முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ) கெலமங்கலம் தளி ஆகிய பகுதிகள் உள்ளிட்ட தர்மபுரி மாவட்டத்தில் (முழுவதும்) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை ரூ. 103.19 லட்சம் செலவில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிபாரிசு செய்தது; மேற்படித் திட்டத்தை ரூ. 69.665 லட்சம் செலவில் செயல்படுத்த 23-3-1978-ல் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.